**Previous Examination date**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 132 of 2018**

**Deposition of Witness P. W.3**

| | |
|---|---|
| **Name : சரண்யா** | **Father/Husband's Name: சுரேஷ்குமார்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 03.10.2023**

**முதல் விசாரணை**

1. நான் பழனி மதனபுரத்தில் குடியிருந்து வருகிறேன். 23.10.2015 ம் தேதி மதியம் 1.00 மணி இருக்கும் நான் 8 மாத கர்ப்பிணியாக எனது அம்மா வீட்டில் இருந்த போது எனது கணவர் சுரேஷ்குமார் என்னை பார்ப்பதற்காக வந்து விட்டு திரும்பி அவரது அப்பாச்சி இருசக்கர வாகனத்தில் சென்ற போது காரமடை நீர்மட்டம் முன்பு நெய்க்காரப்பட்டியிலிருந்து பழனி நோக்கி வந்த அரசு பேருந்து எனது கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதில் அவர் சம்பவ இடத்திலேயே இறந்த விட்டார். பழனி அரசு மருத்துவமனை சென்று எனது கணவரின் உடலை பார்த்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. எனது கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தை சம்பவத்தின் போது யார் இயக்கினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றும், நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. விசாரித்து தெரிந்துகொண்டேன். நான் இன்ன நபரிடம் விசாரித்து தெரிந்து கொண்டதாக போலீஸ் விசாரணையிலோ , முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் ஓட்டிச் சென்றதாக சொல்லப்படும் அப்பாச்சி வாகனத்திற்கு காப்பீடு இருந்ததா

என்றால் இருந்தது அதை போலீசாரிடம் கொடுத்தேன். எனது கணவர் இறந்தது சம்பந்தமாக நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது கணவருக்கு விபத்து நடந்த இடம் பழனி to உடுமலை பிரதான சாலை என்றும் அங்கு நிறைய வாகன போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். மேற்படி சாலையானது இருபுறமும் செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான். எனது கணவருக்கு விபத்து நடந்தது குறித்து எனது அண்ணன் சந்தோஷ் அவர்கள் மூலம் எனக்கு தகவல் கிடைத்தது. எனக்கு இந்த வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும் , நான் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் அதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எதிரிக்கும் , இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.10.27 14:49:00 +0530

நீதித்துறை நடுவர்,

பழனி